# நிறைவேறாத வாக்குறுதிகள்...
# கானல் நீரான எதிர்பார்ப்புகள்...

## BSNLEU கூட்டணி ஊழியர்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் ஒன்று கூட நிறைவேறாத அவலம் பாரீர் !

| எண். | எம்ளாயீஸ் யூனியன் சொன்னது. | உண்மையில் நடந்தது. |
|---|---|---|
| 1 | சம்பள நிர்ணயிப்பின் போது ஏற்பட்ட பே அனாமலிக்கு முடிவு கட்டுவதன் மூலம் சீனியர்களின் குமுறலுக்கு தீர்வு காண்போம். | நான்காண்டுகாலம் BSNLEU சங்கம் அங்கீகாரத்தை அனுபவித்த பின்பும் பே அனாமலி பிரச்சனை தீரவில்லை. சீனியர்களின் குமுறல் அடங்கவில்லை. |
| 2 | CL / RTP சேவையை பென்ஷனுக்கு கணக்கிட வைப்போம். | இது வரை நிறைவேறவில்லை. |
| 3 | பத்துசதவிகித Grade IV பதவிக்கு JTO சம்பளவிகிதம் [9870] பெற்றுத் தருவோம். | இது வரை நிறைவேறவில்லை. |
| 4 | T.M. கேடரில் பணிபுரியும் ஊழியருக்குTTA கேடரில் Officiating பெற்றுத் தருவோம். | இதுவரை நிர்வாகத்துடன் இது குறித்து BSNLEU பேசக்கூட இல்லை. |
| 5 | அனைத்து ஊழியருக்கும் ஐந்து கட்ட பதவி உயர்வு பெற்றுத் தருவோம். | தேர்தல் ஆதாயத்திற்காக BSLEU போட்ட அவசர பதவி உயர்வு ஒப்பந்தம் கூட இன்னும் உத்தரவாக வெளிவரவில்லை. படுமோசமான இந்த பதவி உயர்வு ஒப்பந்தம் வெறும் 4 பதவி உயர்வுக்கு மட்டுமே வழி செய்கிறது. அதுவும் கூட எட்டு ஆண்டுக்கு ஒருமுறை தானாம். SC/ST ஊழியருக்கு இதில் ரிசர்வேஷன் கிடையாதாம். |
| 6 | தேர்வேதுமின்றி T.M. கேடரில் பணிபுரியும் ஊழியரை TTA பதவி உயர்வு பெறச் செய்வோம். | இதுவரை நிறைவேறவில்லை. மாறாக மிகக்கடுமையான தேர்வு ஆங்கிலத்தில் நடத்தப்பட்டதால் தேர்வு எழுதிய பலரும் தேர்ச்சிப் பெற முடியவில்லை. |
| 7 | TTA கேடரின் OTBP / BCR சம்பள விகிதங்களை மாற்றுவோம். | இதுவரை நிறைவேறவில்லை. |
| 8 | அந்நிய நேரடி முதலீட்டை (FDI) எதிர்ப்போம். | கடந்த நான்காண்டில் FDI 74 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. எதிர்ப்பின்றி BSNLEU இதனை ஏற்றுக் கொண்டது. |
| 9 | T.M பயிற்சி முடித்து காத்திருக்கும் அனைத்து R.M களையும் உடனடியாக T.M பதவி உயர்வு பெறச் செய்வோம். | இதுவரை நிறைவேறவில்லை. 4 ஆண்டுகள் கழிந்த பின்பும் T.M பயிற்சி முடித்த R.M. பலர் பதவிஉயர்வு இல்லாமலேயே பணி ஓய்வு பெற்று வெளியேறும் கொடுமை தொடர்கிறது. |
| 10 | டெலிகாம் அக்கவுண்ட்ஸ் எழுத்தர்களின் உயர்சம்பள பிரச்சனை, பதவி உயர்வில் உள்ள தேக்க நிலை ஆகியவற்றை தீர்த்து வைப்போம். | இதுவரை நிறைவேறவில்லை. |

| எண். | எம்ளாயீஸ் யூனியன் சொன்னது. | உண்மையில் நடந்தது. |
|---|---|---|
| 11 | TRI கேடரில் பணிபுரிவோருக்கு மறுக்கப்பட்ட இன்சென்டிங் பெற்றுத் தருவோம். | இதுவரை நிறைவேறவில்லை. |
| 12 | நிர்வாகப்பிரிவு அலுவலக ஊழியருக்கு வாரத்தில் ஐந்துநாள் வேலை திட்டத்தை அமுலாக்குவோம். | இதுவரை நிறைவேறவில்லை. |
| 13 | டிரைவர், டிராப்ட்ஸ் மென் கேடர்களுக்கு நியாயமான பதவிஉயர்வு / உயர்சம்பள விகிதம் பெற்றுத் தருவோம். | இதுவரை நிறைவேறவில்லை. |
| 14 | OTA, வாஷிங் அலவன்ஸ், தையல் கூலி, சைக்கிள் பராமரிப்பு அலவன்ஸ், டியூஷன் கட்டணத்தை உயர்த்துவோம் | இதுவரை நிறைவேறவில்லை. |
| 15 | MTNL க்கு இணையாக அனைத்து அலவன்ஸ்களையும் பெற்றுத் தருவோம். | இதுவரை நிறைவேறவில்லை. |
| 16 | மாதந்தோறும் 150 மணிநேர OTA வை உறுதி செய்வோம். | OTA என்பது மாதத்தில் மூன்று மணி நேரம் கிடைப்பதே குதிரைக் கொம்பாகி விட்டது. |
| 17 | குறைந்தபட்ச போனஸாக பத்தாயிரம் ரூபாய் பெற்றுத்தருவோம். | இவ்வாண்டு முப்பது சதவிகிதம் குறைக்கப்பட்டு ரூ.7000 மட்டுமே குறைந்தபட்ச போனஸாக வழங்கப்பட்டது. 1979 முதல் நமது ஊழியர்கள் ஆண்டுக்கு ஆண்டு கூடுதலான போனஸை பெற்று வந்தர்கள். இவ்வாண்டுதான் முதல் முறையாக சென்ற ஆண்டை விட குறைவாக போனஸ் வழங்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு காட்டாமல் BSNLEU ஏற்றுக்கொண்டது. |
| 18 | டிரான்ஸ்போர்ட் அலவன்ஸை குறைந்தபட்சம் ரூ.400 என உயர்த்துவோம். | நான்காண்டாக டிரான்ஸ்போர்ட் அலவன்ஸ் ரூ.300 தான் வழங்கப்படுகிறது. |
| 19 | சிற்றுண்டி அலவன்ஸை ரூ.500 ஆக உயர்த்துவோம். | நான்காண்டாக ரூ.225 தான் வழங்கப்படுகிறது. |
| 20 | கருணை அடிப்படையில் இறந்த ஊழியரது குடும்பத்தாருக்கு தாமதமின்றி பதவி நியமனம் பெற்றுத் தருவோம். | இரக்கமே இல்லாமல் நிர்வாகம் கடுமையான நிபந்தனைகளை போட்டு கருணை அடிப்படையான வேலைக்குப் வேட்டு வைத்து விட்டது தான் மிச்சம். |
| 21 | எல்லா ஊழியருக்கும் இன்சென்டிவ் திட்டத்தை அறிமுகப்படுத்துவோம். | இதுவரை நிறைவேறவில்லை. |
| 22 | ஊழியரது மருத்துவ செலவுக்கான முழுச் செலவையும் நிர்வாகம் ஏற்கச் செய்வோம். | இதுவரை நிறைவேறவில்லை. NFTE சங்கம் அறிமுகம் செய்த BSNLMRS மருத்துவ திட்டம் சின்னாபின்னமாகி விட்டது. |

| எண். | எம்ளாயீஸ் யூனியன் சொன்னது. | உண்மையில் நடந்தது. |
|---|---|---|
| 23 | LTC சலுகையை பயன்படுத்த முடியாதவர்களுக்கு அத்தொகையை ரொக்கமாக வழங்கச் செய்வோம். | இதுவரை நிறைவேறவில்லை. |
| 24 | பணியிலிருக்கும் ஊழியர்கள் மரணமடைந்தால் குடும்பத்தாருக்கு 50 % நிவாரணத் தொகை வழங்கச் செய்வோம். | இதுவரை நிறைவேறவில்லை. |
| 25 | IDA சம்பளத்தில் அரசு பென்ஷன் தொடரச் செய்வோம். | NFTE, FNTO சங்கங்கள் போராடி பாதுகாத்த பென்ஷனுக்கு கடந்த இரண்டாண்டாய் ஆபத்து வந்துவிட்டது. பென்ஷனுக்கு செலவாகும் தொகையை அரசு நிதியிலிருந்து வழங்க வேண்டும் என்ற உடன்பாட்டை மீறி DOT 2006 ஜீன் மாதத்தில் 60 : 40 விகிதத்தில் தான் பென்ஷன் செலவை அரசும், நிர்வாகமும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என படுமோசமான உத்தரவை போட்டது. கடந்த இரண்டாண்டாய் இவ்வுத்தரவை எதிர்த்து போராடாமல் அமைதியாக BSNLEU இருந்து விட்டதால் எதிர்காலத்தில் நமது ஊழியர்கள் பென்ஷன் பெறுவது பெரும் ஆபத்துக்குள்ளாகி விட்டது. |
| 26 | BSNL நிறுவனத்தின் பங்குகளை விற்க அனுமதிக்க மாட்டோம். | BSNL நிர்வாகக்குழு நமது நிறுவனத்தின் பத்து சதவிகித பங்குகளை விற்க முடிவெடுத்து DOT க்கு பரிந்துரையை அனுப்பிவிட்டது. இன்னமும் இந்த பங்கு விற்பனை கொள்கையை எதிர்த்துப் போராட BSNLEU தவறிவிட்டது. |
| 27 | VRS / CRS திட்டங்களை தடுத்து நிறுத்துவோம். | நாடாளுமன்றத்தில் நமது அமைச்சர் முதல் கட்டமாக 20.000 சீனியர் TOA ஊழியரை VRS திட்டத்தின் கீழ் வெளியேற்றப் போவதாக பகிரங்கமாக அறிவித்துவிட்டார். |
| 28 | நஷ்டம் தரும் ITI நிறுவனத்தை BSNL உடன் இணைப்பதை தடுப்போம். | ITI நிறுவனத்தை BSNL உடன் இணைக்கும் முயற்சி தீவிரமாக உள்ளது. மத்திய அரசு எந்த நேரத்திலும் இந்த இணைப்பை அதிகார பூர்வமாக அறிவிக்கலாம். இவ்விணைப்பு நிகழ்ந்தால் BSNL உடனடியாக ரூ.5000 கோடி நஷ்டத்தில் வீழ்ந்து விடும் என உயரதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர். |
| 29 | BSNL நிறுவனத்தை பாதுகாப்போம் ; இலாபத்தில் இயங்கும் நிறுவனமாக அதனை மேம்படுத்துவோம். | கடந்த 4 ஆண்டுகளில் BSNL நிறுவனத்தின் வளர்ச்சி, விரிவாக்கம் முடக்கப்பட்டது. இதனால் BSNL வருவாயும் இலாபமும் பெருமளவுக்கு குறைந்து விட்டது. அரசின் சதிச்செயலை எதிர்த்து போராடாமல் BSNLEU அமைச்சரிடம் சரணடைந்து விட்டது. தோழர் நம்பூதிரி 4 ஆண்டுகளில் 6 வேலை நிறுத்தங்களை ஒத்தி வைத்தார். |

| எண். | எம்ளாயீஸ் யூனியன் சொன்னது. | உண்மையில் நடந்தது. |
| --- | --- | --- |
| 30 | ஊதிய உயர்வை விரைந்து பெற்றுத் தருவோம். | 1-1-2007 முதல் ஊதியம் உயர்த்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இரண்டாண்டு காலதாமதம் ஆனபின்பும் இதுவரை ஊதிய உயர்வுக்கான பேச்சு வார்த்தைக் கூட துவங்கவில்லை. JTO முதல் CMD வரை அனைத்து அதிகாரிகளுக்கும் ஊதிய உயர்வு கிடைத்து விட்டது 2.4 லட்சம் அடிமட்ட ஊழியருக்கு மட்டும் இதுவரை ஊதிய உயர்வோ இடைக்கால நிவாரணமோ வழங்கப்படவில்லை. |

தோழர்களே, தோழியரே!

பொய்யான வாக்குறுதிகளை வாரிவழங்கி நமது ஊழியரை நான்காண்டாய் ஏமாற்றி வஞ்சித்த நம்பூதிரி கூட்டணியை தோற்கடித்தால் மட்டுமே நமது ஊழியரின் நலன்கள் பாதுகாக்கப்படும். அரசின் மோசமான கொள்கைகளை எதிர்த்து போராடாமல் அமைச்சரிடம் சரணாகதி அடைந்து விட்ட BSNLEU வை வீழ்த்திட **21-01-2009** ல் நடைபெறும் அங்கீகார தேர்தலில் NFTE - BSNL ஐ தேர்ந்தெடுப்பீர். அதன் சின்னமான **ஒன்பது கரங்களில்** வாக்களிப்பீர்.

**VOTE FOR**

**12 NFTE**

**NFTE-BSNL, NUBSNLW (FNTO), SC/ST EWA-BSNL, BSNLEC, BSNLES, BSNL PEWA, AIOBC (BSNL)EWA, BSNL - WRU**

மாநில தேர்தல் பணிக்குழு

**BSNL** தொழிலாளர் கூட்டணி, சென்னை தொலைபேசி.